பதிவஞ்சல் ஒப்புகையுடன்

## பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை

அனுப்புநர்.
மரு. எம்.அனிதா, எம்பிபிஎஸ், எம்பிஎச்.,
துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள்.
பழனி

பெறுநர்
THE PRINCIPAL,
AKSHAYA ACADEMY
AFFILIATED TO THE (CBSE)DELHI,
PUDUCHATRAM POST, ODDANCHATRAM,
DINDIGUL DISTRICT.

ஒ.மு.எண். 4015/அ3/2022 நாள்: .07.2022

அய்யா,

பொருள்: பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை - சுகாதார சான்றிதழ் விண்ணப்பத்திற்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்புதல் வழங்குதல் தொடர்பாக.

பார்வை: 1. கொ.கீரனூர் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் அவர்களின் கடித நாள்:18.07.2022.

பார்வையில் காணும் கடிதத்தின் மூலம் ஒப்புதல் கேட்டு பெறப்பட்ட, THE PRINCIPAL, AKSHAYA ACADEMY AFFILIATED TO THE (CBSE)DELHI, PUDUCHATRAM POST, ODDANCHATRAM, DINDIGUL DISTRICT. அவர்களுடைய சுகாதாரச் சான்றிதழ் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் படி மேலொப்பம் செய்து அனுப்பப்படுகிறது.

1. தீயணைப்புத் துறையின் சான்றிதழ், தீயணைப்பு சாதனங்கள் வைக்கப்பட வேண்டும்.
2. உணவு விடுதி 1939ம் ஆண்டு பொது சுகாதாரச் சட்டத்திற்கு உட்பட்டு சுத்தமாகவும் சுகாதாரமாகவும் எப்பொழுதும் பராமரிக்கப்பட வேண்டும்.
3. எளிதில் தீப்பற்றக் கூடிய கூரைகள் எப்பொழுதும் உபயோகிக்கக் கூடாது.
4. கட்டிடம் வரைபடத்தில் உள்ளபடி இருக்க வேண்டும். கூடுதலாக ஏதும் கட்டிடம் கட்ட இருப்பின் பஞ்சாயத்து நிர்வாகத்தின் ஒப்புதல் மீண்டும் பெற வேண்டும்.
5. வகுப்பறையில் உள்ள மாணவ, மாணவிகள் இருக்கை வசதிகள் கல்வித்துறையின் விதிகளுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.
6. விடுதி இருப்பின் அதற்கான <u>தனி சான்றிதழ் பெறப்பட வேண்டும்.</u>
7. பள்ளியில் சுற்றுச் சுவர் உறுதியாக இருக்க வேண்டும்.
8. பள்ளியில் குறுக்கே மின்வாரிய மின் அழுத்த கம்பி ஊடே செல்லக் கூடாது.
9. பள்ளியில் விளையாட்டு மைதானம் அவசியம் இருக்க வேண்டும்.
10. பள்ளியில் முதலுதவி பெட்டி அவசியம் இருத்தல் வேண்டும்.
11. வகுப்பறைகள் தனித்தனியாக பிரிக்கப்பட வேண்டும்.
12. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியுடன் மேல்நிலைத் தொட்டிகள் அமைக்கப்பட வேண்டும். மேல்நிலைத் தொட்டி குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை கழுவி, சுத்தம் செய்து பின் சப்ளை செய்தல் வேண்டும். நன்றாக மூடி இருக்க வேண்டும்.
13. தண்ணீர் சேமிப்பு கலங்களை வாரத்திற்கு ஒருமுறை கழுவ வேண்டும். மூடிவைத்து தண்ணீர் கொடுத்தல் வேண்டும்.
14. கழிவறை தினமும் சுத்தம் செய்தல் வேண்டும்.
15. பிளிச்சிங் பவுடர், பினாயில், லைசால் சுண்ணாம்பு, நீர் முதலானவற்றை இருப்புப் பதிவேட்டில் பதிந்து விநியோகிப்பதை மேற்பார்வையிடல் செய்தல் வேண்டும்.
16. குடிநீர் தினமும் குளோரினேசன் செய்து வழங்கல் வேண்டும்.
17. குளோரினேசன் செய்வதை பதிவேடு ஒன்றில் பதிய வேண்டும். சுகாதார ஆய்வாளர் பார்வையிடல் செய்தல் வேண்டும்.
18. ஹாஸ்டல் மற்றும் கேன்டீனிற்கு தனியாக சுகாதாரச்சான்று பெறல் வேண்டும்.
19. கேன்டீன் பணியாளர்களுக்கு தன்சுத்தம் பற்றி பயிற்சியளிப்பதோடு மருத்துவ அதிகாரியிடம் பரிசோதனை செய்து தகுதிச்சான்று பெறவேண்டும்.
20. கல்வித் துறை விதியின்படி மாணவ, மாணவிகளுக்கு மற்றும் ஆசிரியர்களுக்கு தனித்தனியே போதுமான எண்ணிக்கை கழிப்பறை வசதி செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும் அதனை சுத்தமாக பராமரிக்க வேண்டும்.
21. மூடியுடன் கூடிய குழாய் பொருந்திய டிரம்களில் தண்ணீர் சேமித்து குழந்தைகளுக்கு வழங்க வேண்டும்.

**மேற்கண்ட நிபந்தனைகள் தவறும் பட்சத்தில் இந்த அங்கீகாரம் ரத்து செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

<u>இணைப்பு:</u> சுகாதாரச் சான்று - 1

துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள்
பழனி.

நகல்:வட்டார சுகாதார மேற்பார்வையாளர், வட்டார ஆரம்ப சுகாதார நிலையம், கொ.கீரனூர் ,

SECRETARY

PRINCIPAL